**கவனிக்க.**-*2016.12.30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) , பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2001 - 2017 ජනවාරි මස 06 වැනි සිකුරාදා - 2017.01.06

*2001 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 2 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 3 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- *தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ( திருத்தம்) சட்டமூலம் 2016, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2017, சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, சனவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை

கொழும்பு மாவட்ட நீதி மன்றம்

திருத்தப்பட்ட வகையில் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மற்றும் அதனுடன் சார்ந்த தீர்வுக் கட்டளை மற்றும் முற்றான கட்டளை தொடர்பான காரணம் ஒன்று;

கொழும்பு மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இல.: D.D.R.119/2015
தன்மை: டி.டி.ஆர்
நடவடிக்கை:சுருக்கம்
பெறுமதி: 2,700,000.00 ரூபா
கம்பஹா மாவட்ட நீதிமன்றம்
எஸ்கீசி இல.47/ 2016

ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ ( முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி)

பதிவு அலுவலகம் : இல. 479( முன்பு 481), டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு -10.
கிளை: மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.

வழக்காளி

-எதிர்-

மஹரகே சதுர தனுந்தர ஆரியரத்ன,
இல.47/ 14, வெரலுகொல்ல வத்த,
வடத்தர, வேயங்கொட.

எதிராளி

மேற்படி இலக்கம் கொண்ட வழக்கில் இந்த நீதிமன்றத்தால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் படி, இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் என்னால் 2016, மே மாதம் 24 ஆந் திகதி தடைசெய்த பின்னர் மேற்படி எதிராளியினால் முற்றிலாக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான 681,593.83 ரூபாவை வழக்காளி வங்கிக்கு செலுத்துவதை தவறியுள்ள படியால் குறித்த தொகையை , முற்றிலாக் கட்டளைத் தினமான 2015.03.01 ஆம் திகதி தொடக்கம் முழுத் தொகையை செலுத்தி முடியும் வரை 15% வருடாந்த வட்டியும், 1,386, 359.40 ரூபா தொகையும், அதற்கு வட்டியும் மேலும் குறித்த தொகைக்கு 2015.03.01 ஆம் திகதி தொடக்கம் முழுத் தொகையை செலுத்தி முடியும் வரை 16% வருடாந்த வட்டியும், 559,154.40 ரூபா தொகையும் , அதற்கு வட்டியும், மேலும் குறித்த தொகைக்கு 2016.01.03 ஆந் திகதி தொடக்கம் முழுத் தொகையை செலுத்தி முடியும்வரை 18% வருடாந்த வட்டியும், வழக்கு செலவினங்களும் எதிராளிகளால் வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளதுடன், குறித்த தொகையை செலுத்துவதற்கு எதிராளி தவறியுள்ளபடியால் இந் நீதிமன்றத்தால் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள எஸ்கீஸீ தடைக்கட்டளைப்படி என்னால் 2016.0524 ஆந் திகதி தடை செய்யப்பட்டுள்ள எதிராளிக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட அசையாத ஆதனம்,

2017, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு மேற்படி பெயரிடப்பட்ட எதிராளியின் ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிசுக்கால் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் முடிவடைந்தவுடன் உத்தேசக் கொள்வனவாளர் விற்பனை விலையின் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக் கப்பட்டுள்ள கட்டணங்களின்படி அரசாங்க கட்டணங்களும், விற்பனைத் தொகையிலிருந்து 25% ஆன ஏலதாரர் தரகு பணமும், உள்ளூராட்சி சபை கட்டணங்கள், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு செலவுகளும் ஏலதாரர்களுக்கு செலுத்த வேண்டும். மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% த்தை ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவ்வழக்குக்குப் பற்றாக குறித்த கம்பஹா நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டியதுடன், அதற்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய இரு பிணையாட்களை அதே தருணத்தில் முன்வைத்து விற்பனை நிபந்தனைகளுக்கு கையொப்பமிட வேண்டும்.

### காணிக்குச் செல்லும் விதம்

கொழும்பு - கண்டி வீதியில் மிரிஸ்வத்த சந்தியில் வலது பக்கமாக திரும்பி வதுருகம வீதியில் 2.5 கிலோமீற்றர் கொஸ் கீனிகம சந்திவரை சென்று, இடது பக்கமாக இருக்கும் சமகி மாவத்தையில் 200 மீற்றர் சென்றால் த பினேன்ஸ் நிறுவனத்தால் அண்மையில் ஏல விற்பனை செய்யப்பட்ட துண்டு 07 அமைந்துள்ளது.

### முதலாம் அட்டவணை

மேல் மகாணத்தின்,கம்பஹா மாவட்டத்தின் சியனே கோரளை மெத பத்துவ மஹர பிரதேச சபை எல்லையில் ஊருவல்பொருவ மல்வது ஹிரிபிடிய/புத்பிடிய இல. 05 உப அலுவலக எல்லையில், பிடுவல்பொடயில் அமைந்துள்ள ''நாகஹஹேன மற்றும் மில்லகஹவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. நிஹால் அவர்களால் 2007.09.22ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1986 என்ற வரைபடம் படி துண்டு 07 என பிரிவிடப்பட்ட காணிக்கு எல்லைகள், வடக்கு: துண்டு 19 மற்றும் 01; கிழக்கு: சோமா சுபசிங்கவுக்கு சொந்தமான காணி; தெற்கு: துண்டு 08 மற்றும் 06; மேற்கு: துண்டு 06 மற்றும் 19 என்ற வரைபட இல. 1986 இன் படி 13.20 பேர்ச். (0ஏ.0றூ.13.20பே.) விஸ்தீரணம் கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள சகலதும். இக் காணி கம்பஹா காணி பதிவகத்தில் E890/240 என்ற போலியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாதை உரித்துக்காக E890/239 மற்றும் E 890/238 ஐ பார்க்கவும்.

### இரண்டாம் அட்டவணை

1. மேல் மகாணத்தின்,கம்பஹா மாவட்டத்தின் சியனே கோரளை மெத பத்துவ மஹர பிரதேச சபை எல்லையில் ஊருவல்பொருவ மல்வது ஹிரிபிடிய/புத்பிடிய இல. 05 உப அலுவலக எல்லையில், பிடுவல்பொடயில் அமைந்துள்ள ''நாகஹஹேன மற்றும் மில்லகஹவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ.ஏ. நிஹால் அவர்களால் 2007.09.22ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1986 என்ற வரைபடம் படி துண்டு 13(பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) என பிரிவிடப்பட்ட காணிக்கு எல்லைகள், வடக்கு: துண்டு 18 மற்றும் 06; கிழக்கு: துண்டு 06,08,18,17 மற்றும் ரஞ்சித் சுபசிங்கவுக்குச் சொந்தமான காணி; தெற்கு: வீதி; மேற்கு: துண்டு 20,16, 14,12,11,10,09,05 மற்றும் 19 என்ற வரைபட இல. 1986 இன் படி 26.80 பேர்ச்.(0ஏ.0றூ.26.80பே.) விஸ்தீரணம் கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள சகலதும். இக் காணி கம்பஹா காணி பதிவகத்தில் E890/229 என்ற போலியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மகாணத்தின்,கம்பஹா மாவட்டத்தின் சியனே கோரளை மெத பத்துவ மஹர பிரதேச சபை எல்லையில் ஊருவல்பொருவ மல்வது ஹிரிபிடிய/புத்பிடிய இல. 05 உப அலுவலக எல்லையில், பிடுவல்பொடயில் அமைந்துள்ள ''நாகஹஹேன மற்றும் மில்லகஹவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. நிஹால் அவர்களால் 2007.09.22ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1986 என்ற வரைபடம் படி துண்டு 19 (பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) என பிரிவிடப்பட்ட காணிக்கு எல்லைகள், வடக்கு: துண்டு 03,02 மற்றும் 01; கிழக்கு: துண்டு 01மற்றும் 07; தெற்கு: துண்டு 07,06,13 மற்றும்5; மேற்கு: துண்டு 04 என்ற வரைபட இல. 1986 இன் படி 6.20 பேர்ச். (0ஏ.0றூ.6.20பே.) விஸ்தீரணம் கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள சகலதும். இக் காணி கம்பஹா காணி பதிவகத்தில் E890/238 என்ற போலியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவாளர்/உதவி பிஸ்கல்,
மாவட்ட நீதி மன்றம்,
கம்பஹா.

2016,திசெம்பர் 22.

1-158

---

## நானாவித அறிவித்தல்கள்

### "அகில இலங்கை வரலாற்று ரீதியான தேவாலய அலுவலர்களின் சங்கத்தைக்" கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

டாக்டர் துஸிதா விஜேமான்ன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "அகில இலங்கை வரலாற்று ரீதியான தேவாலய அலுவலர்களின் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.:-

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த "அகில இலங்கை வரலாற்று ரீதியான தேவாலய அலுவலர்களின் சங்கத்தைக்" கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(அ) தேவாலயத்தை அண்மித்த, அவ்வந்த தேவாலயங்களுக்கேயுரிய பண்டைய பாரம்பரியங்கள்/ பழக்கவழக்கங்கள்/ நடை முறைகளும் கடமைகளும்/மத நடவடிக்கைகள் என்பவற்றைப் பாதுகாத்து தொடர்ந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.;

(ஆ) தேவாலயங்களின் பாரம்பரிய அலுவலர்களின் பரம்பரை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அவசியமான தலையீடுகளை மேற்கொள்ளல் மற்றும்;

(இ) எவரேனுமொரு உறுப்பினருக்கு சட்டரீதியான மற்றும் வேறு வகையில் ஏற்படும் பிரச்சனைக்குரிய நிலைமைகளில் மத்தியஸ்தரொருவராக சங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதலும் ,

பிறவும்.

டாக்டர் துஸிதா விஜேமான்ன,
பாராளுமன்ற உறுப்பினர்,
கேகாலை மாவட்டம்.

1-164

---

### கொழும்பில் நடைபெறும் ( வர்த்தக நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் ) மேல் மாகாணத்தின் மாகாணங்களுக்கிடையிலான மேல் நீதிமன்றத்தில்

பண்டாரகம ரபுக்கன பஹலமுள்ள வீதி, இல. 21/1 கொண்ட இடத்தில் அமைந்துள்ள ஜீ.எஸ்.ஐ.லங்கா ( பிறைவேட்) லிமிட்டட் தொடர்பான விடயமாகும்

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(அ) மற்றும் /அல்லது (இ) மற்றும் /அல்லது (ஈ) பிரிவின் கீழ் நீதி

மன்றத்தால் ஜீ.எஸ்.ஐ லங்கா ( பிறைவேட்) லிமிட்டட் ஒதுக்கி மூடுவதற்கான கோரிக்கை;

வழக்கு இல. : எம்.சீ.( சிவில்) 69/ 2016/CO
தன்மை: ஒதுக்குதல்

பண்டாரகம, ரபுக்கன பஹலமுள்ள வீதி, இல. 21/ 1 கொண்ட இடத்தில் அமைந்துள்ள ஜீஎஸ்.ஐ.லங்கா (பிறைவேட்) லிமிட்டட்.

மனுதாரர்

கொழும்பில் நடைபெறும் ( வர்த்தக நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும்) மேல் மாகாணத்தின் மாகாணங்களுக்கிடையிலான மேல் நீதிமன்றத்தினால் மேற்படி கம்பனியின் கணக்கு வழக்குகளை முடித்து மூடுவதற்காக 21/ 1 கொண்ட இடத்தில் அமைந்துள்ள ஜீ.எஸ்.ஐ. லங்கா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியை 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி நீதிமன்றத்திற்கு மேற்குறித்த மனுவை சமர்ப்பித்ததாகவும் அம் மனு 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டதாகவும் அம்மனுவின் மீது உத்தரவிடுவது தொடர்பாக ஒத்துழைப்பு வழங்க அல்லது எதிர்ப்பை தெரிவிக்க விருப்பமுள்ள அக்கம்பனியின் கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்பு செய்தவர் அம் மனுவை விசாரிக்கும் நேரத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது சட்டத்தரணி ஒருவர் மூலம் அல்லது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஒருவர் மூலம் அந்த நோக்கத்திற்காக தோற்றலாம் எனவும் இத்தால் அறிவிக்கப் படுகின்றது. மேலும் மேற்படி மனுவின் பிரதியும் அதற்கான கட்டணத்தை செலுத்துவதன் மூலம் அதனை தேவைப்படும் கம்பனியின் ஏதேனும் கடன் பட்டவருக்கு அல்லது பங்களிப்பு செய்தவருக்கு கீழ் கையெழுத்திடுபவரால் வழங்கப்படும்.

கையொப்பம் :

ஜோன் வில்சன் பார்ட்ன்ஸ்,
சட்டத்தரணிகள் மற்றும் பிரசித்த நொத்தாரிசுகள்,
இல.365, டாம் வீதி,
கொழும்பு 12.

**குறிப்பு**.- மேற் குறித்த மனுவை விசாரிக்கும் போது நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கு கருதும் எவரேனும் இருப்பின் தனது கருத்தை மேற்படி சட்டத்தரணி கம்பனியான ஜோன் வில்சன் பார்ட்னஸ் சட்டத்தரணிகளுக்கு எழுத்து மூலம் அல்லது தபால் மூலம் அல்லது நேரில் வந்து ஒப்படைக்க வேண்டும். நபர்களின் பெயர்கள் மற்றும் முகரிகள் அல்லது ஏதேனும் வர்த்தக நிறுவனமாயின் அதன் பெயர் மற்றும் முகவரியை அழைப்பாணையில் அறிவித்தலில் குறிப்பிட வேண்டுவதுடன் அந்த நபர் அல்லது வர்த்தக நிறுவனம் அல்லது அந்நபரான பதிவு செய்யப்பட்டுள்ள தனது சட்டத்தரணிகள் இருப்பின் அவர்களால் கையொப்பமிடல் வேண்டும். அதனை 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு முன்பு மேற்படி சட்டத்தரணி கம்பனிக்கு கிடைக்கக் கூடியவாறு காலம் தாழ்த்தாது ஒப்படைத்தல் அல்லது தபாலில் இட வேண்டும்.

ஜோன் வில்சன் பார்ட்னஸ்,
சட்டத்தரணிகள் மற்றும்
பிரசித்த நொத்தாரிசுகள்,
இல.365, டாம் வீதி,
கொழும்பு 12.

பதிவாளர்,
வர்த்தக நீதிமன்றம்,
கொழும்பு 12.

1-118

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2017***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***சனவரி*** | .. | வெள்ளி | 06.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2016 |
| | | வெள்ளி | 13.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2016 |
| | | வெள்ளி | 20.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.01.2017 |
| | | வெள்ளி | 27.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2017 |
| ***பெப்புருவரி*** | .. | வெள்ளி | 03.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2017 |
| | | வியாழன் | 09.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2017 |
| | | வெள்ளி | 17.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2017 |
| | | வியாழன் | 23.02.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.02.2017 |
| ***மாச்சு*** | .. | வெள்ளி | 03.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2017 |
| | | வெள்ளி | 10.03.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.02.2017 |
| | | வெள்ளி | 17.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2017 |
| | | வெள்ளி | 24.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2017 |
| | | வெள்ளி | 31.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2017 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*